# KE 3 - Fundamentals of Law

## பரிந்துரை செய்யப்பட்ட விடைகள் மற்றும் புள்ளியிடல் வழிகாட்டி

## பிரிவு 1

### பிரிவு 1 (a)

**1.1** சரியான விடை B.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களமானது 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது

| கற்றல் வெளிப்பாடு : |
| --- |
| 1.4.1 பின்வரும் நிறுவனங்களின் வகிபங்கை விளக்கப்படுத்தல்: இலங்கையின் பட்டயக்கணக்கறிஞர் நிறுவகமானது, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, பிணைகள்\காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு, முதலீட்டுச் சபை, கொழும்பு பங்குச் சந்தை, கம்பனி பதிவாளர் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மத்திய வங்கி, (நாணய மாற்று கட்டுப்பாட்டு அம்சம்)<br>1.4.2 மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவவகங்களினதும் பிரதான தொழிற்பாடுகளை இணங்காணல். |

**1.2** சரியான விடை B
பணம் பெறப்பட்ட உண்மையான வழிவகையை வெளியிடாமல் முறையற்ற விதத்தில் பணத்தை சேர்த்து வைத்திருத்தல் பண மோசடியாகும்.

| கற்றல் வெளிப்பாடு : |
| --- |
| 7.1.1 மோசடி, களவு, பண மோசடி, லஞ்சம், கவனயீனம் என்பவற்றை வரையறுத்தல் |

**1.3** சரியான விடை C

காசோலையின் மீது இரு இணைக் கோடுகள் எழுதப்பட்டு இருக்குமானால், அது குறுக்கு கோடிடப்பட்ட காசோலையாக கருதப்படும்.

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 4.1.1 காசோலை, மாற்றுண்டியல் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்களுக்கிடையிலான வேறுபாடுகளை வரையறுத்தலும் அடையாளம் காணலும். <br><br> 4.1.2 வியாபாரக் கருத்தூரலில் மாற்றுண்டியல் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்களின் தொழிற்பாடுகளை விளக்குதல். <br><br> 4.2.1 கீழ்வரும் பொருந்தும் சட்டக் கோட்பாடுகள், மற்றும் அவற்றின் வர்த்தக சிறப்பம்சம்(புறக்குறிப்புக்கள், குறுக்கு கோடிடல், மறுத்தல் மற்றும் வங்கியாளரின பொறுப்பாண்மை) தொடர்பில் விளக்குதல். <br><br> 4.3.1 மாற்றுண்டியலை பொருத்தமட்டில் ‘‘ஈற்றில் வைத்திருப்பவர்’’ மற்றும் ‘‘சமர்ப்பித்தல்’’ என்பவற்றின் வர்த்தக சிறப்பம்சம் தொடர்பில் வரைவிலக்கணம் செய்தலும் விளக்குதலும். |

**1.4** சரியான விடை A

காசோலையானது பணம் செலுத்துதற் பொருட்டு குறிப்பாக வங்கியாளரை நோக்கி எழுதப்படுவதனால் நாணய மாற்று உண்டியலில் இருந்து சிறப்புத் தன்மையுடையதாக அமைகிறது.

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 4.1.1 காசோலை, மாற்றுண்டியல் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்களுக்கிடையிலான வேறுபாடுகளை வரையறுத்தலும் அடையாளம் காணலும். <br><br> 4.1.2 வியாபாரக் கருத்தூரலில் மாற்றுண்டியல் மற்றும் வாக்குறுதிப் பத்திரங்களின் தொழிற்பாடுகளை விளக்குதல். <br><br> 4.2.1 கீழ்வரும் பொருந்தும் சட்டக் கோட்பாடுகள், மற்றும் அவற்றின் வர்த்தக சிறப்பம்சம்(புறக்குறிப்புக்கள், குறுக்கு கோடிடல், மறுத்தல் மற்றும் வங்கியாளரின பொறுப்பாண்மை) தொடர்பில் விளக்குதல். <br><br> 4.3.1 மாற்றுண்டியலை பொருத்தமட்டில் ‘‘ஈற்றில் வைத்திருப்பவர்’’ மற்றும் ‘‘சமர்ப்பித்தல்’’ என்பவற்றின் வர்த்தக சிறப்பம்சம் தொடர்பில் வரைவிலக்கணம் செய்தலும் விளக்குதலும். |

**1.5** சரியான விடை A

பொருட்களை வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ, பொருள் விற்பனைக்காக கையெழுத்திடவோ அல்லது அடகு மூல பொருட்களுக்கான பணத்தை பெறவோ தனது முதல்வரை பிணிப்பதற்கு அதிகாரத்தை பெற்ற நபர்.

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 5.1.1 பரஸ்பர உடன்படிக்கை, ஏற்றங்கீகரிப்பு, அவசியதன்மை மற்றும் முரண்தடை மூலம் முதல்வர்- முகவர் உறவு அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை விளக்குதல். |

**1.6** சரியான விடை C

விற்பனைக்கான அழைப்பு

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 2.1.1 வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகள் (கொடைமுனைவு மற்றும் ஏற்பு, சட்ட உறவுகளை உருவாக்குவதற்கான எண்ணம், மறுபயன் இயலுமையும் உருவமைப்பும்) பற்றி விளக்குதலும் ஒரு ஒப்பந்தம், உடன்படிக்கை, ஒப்பந்த இயலுமை, ஒப்பந்த உருவாக்கம், சம்மதத்தின் உண்மைத்துவம் என்பவற்றினை வரைவிலக்கணப்படுத்துதலும். |

**1.7** சரியான விடை D

தோழில் தருநரினால் ஓய்வூதிய சுற்று நிருபம் அமைக்கப்பட்டு ஓய்வூதியம் பெறும் தொழிலாளிக்கு இந்தச் சட்டமானது ஏற்புடையதாகாது

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 6.2.1 வாடகைக் கொள்வனவு பற்றிய எண்ணக்கரு விளக்கம். |

**1.8** சரியான விடை C

உணவிற்கான கொடுப்பனவு

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 6.1.1 பொருத்தமான விதிவிலக்கு என்பவற்றுடன், யார் ஊழியர் சேமநல நிதி மற்றும ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றிற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் என்பதை விளக்குதல்<br><br>6.1.2 ஊழியர் சேமநல நிதி மற்றும் தனியார் சேமநல நிதி என்பவற்றிற்கிடையிலான பிரதான வேறுபாட்டை விளக்குதல் |

**1.9** சரியான விடை A

ஒப்பந்தமொன்று கட்டாயம் எழுத்தில் காணப்பட வேண்டும்

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 2.1.1 வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகள் (கொடைமுனைவு மற்றும் ஏற்பு, சட்ட உறவுகளை உருவாக்குவதற்கான எண்ணம், மறுபயன் இயலுமையும் உருவமைப்பும்) பற்றி விளக்குதலும் ஒரு ஒப்பந்தம், உடன்படிக்கை, ஒப்பந்த இயலுமை, ஒப்பந்த உருவாக்கம்,சம்மதத்தின் உண்மைத்துவம் என்பவற்றினை வரைவிலக்கணப்படுத்துதலும். |

**1.10** சரியான விடை A

குடும்பச் சட்டம் மற்றும் வணிகச் சட்டம்

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 1.1.1 இலங்கையின் சட்டமுறைமையின் பிரதான பிரிவுகள் மற்றும் அவற்றின் வகிபங்கினை இணங்காணுதல். |

**(ஒவ்வொன்றிற்கும் 2 புள்ளிகள்)**

**பிரிவு 1 (b)**

**வினா 2.1**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 1.1.1 இலங்கையின் சட்டமுறைமையின் பிரதான பிரிவுகள் மற்றும் அவற்றின் வகிபங்கினை இணங்காணுதல். |

- வழக்காறானது பழமை வாய்ந்ததாகவும், உறுதியானதாகவும் முறிவுறாது நீண்ட காலம் அனுபவிக்கப்பட்டு வருவதாகவும் காணப்பட வேண்டும்.
- அது நியாயமானதாகவும், ஏனைய சட்டக் கொள்கைகளுடன் முரண்படாததாகவும் காணப்பட வேண்டும்.
- அது நிச்சயமானதாக காணப்படுவதோடு எந்த சந்தேகமும் இன்றி ஒரு

வழக்காறாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதுடன், பாவணையில் இல்லாமை காரணமாக அது வழக்கொழிந்திருக்க கூடாது.

**(ஒரு விடைக்கு 1 புள்ளி மொத்தம் 2 புள்ளிகள்)**

**வினா 2.2**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 5.1.1 பரஸ்பர உடன்படிக்கை, ஏற்றங்கீகரிப்பு, அவசியதன்மை மற்றும் முரண்தடை மூலம முதல்வர்- முகவர் உறவு அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை விளக்குதல். |

- முதல்வரின் அறிவுறுத்தலை பெறுதல் சாத்தியம் இல்லாது இருத்தல்.
- முகவராண்மை உருவாக்கத்தின் போது உண்மையான மற்றும் வர்த்தக ரீதியான அவசியத்தன்மை ஏற்பட்டிருக்க வேண்டும்.
- முகவரானவர் நல்லெண்ணத்துடனும் அனைத்து கட்சிக்காரர்களதும் நன்மைக்காகவும் செயற்பட்டிருக்க வேண்டும்.

**(எதாவது ஒரு விடைக்கு 1 புள்ளி மொத்தப் புள்ளிகள் 2)**

**வினா 2.3**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 5.1.1 பரஸ்பர உடன்படிக்கை, ஏற்றங்கீகரிப்பு,அவசியதன்மை மற்றும் முரண்தடை மூலம முதல்வர்- முகவர் உறவு அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை விளக்குதல். |

முதல்வர் சார்பில் ஒப்பந்தமானது செய்யப்படுவதற்கு முன்னர், முகவர் தனக்கான அதிகாரத்தை பெற்றிருப்பாரானால், முதல்வரை பிணிக்கும் வகையில் குறித்த ஒப்பந்தம் செல்லுபடியாகும்.

**(2 புள்ளிகள் )**

**வினா 2.4**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 5.7.2 வலிதான பங்குடமையொன்று உருவாக்கலுக்கான தேவைகளைக் குறிப்பிடல். |

- கட்சிக்காரர்களுக்கு இடையில் வலிதான உடன்படிக்கை காணப்பட வேண்டும்.
- பங்குடமையானது வியாபாரம் சம்பந்தமானதாக காணப்பட வேண்டும்.
- வியாபாரமானது நபர்களுக்கு மத்தியில் பொதுவாக நடாத்தப்படுவதாக காணப்பட வேண்டும்.
- பங்குடமை வியாபாரமானது இலாபத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கொண்டு நடாத்தப்படுவதாக இருக்க வேண்டும்.

**(எதாவது ஒரு விடைக்கு 1/2 புள்ளி மொத்தப் புள்ளிகள் 2)**

**வினா 2.5**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 2.1.1 வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகள் (கொடைமுனைவு மற்றும் ஏற்பு, சட்ட உறவுகளை உருவாக்குவதற்கான எண்ணம், மறுபயன் இயலுமையும் உருவமைப்பும்) பற்றி விளக்குதலும் ஒரு ஒப்பந்தம், உடன்படிக்கை, ஒப்பந்த இயலுமை, ஒப்பந்த உருவாக்கம்,சம்மதத்தின் உண்மைத்துவம் என்பவற்றினை வரைவிலக்கணப்படுத்துதலும். |

- விளம்பரங்கள்
- வியாபார நிலையங்களில் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருத்தல்.
- வியாபார நிலையங்களில் நாங்களாகவே பொருட்களை தெரிந்து எடுக்கும் ஏற்பாடு காணப்படல்
- பெயர்பட்டியல் வரிசை
- ஏலம்

**(எதாவது ஒரு விடைக்கு 1 புள்ளி மொத்தப் புள்ளிகள் 2)**

## பிரிவு 2

### வினா 03

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 2.1.1 வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகள் (கொடைமுனைவு மற்றும் ஏற்பு, சட்ட உறவுகளை உருவாக்குவதற்கான எண்ணம், மறுபயன் இயலுமையும் உருவமைப்பும்) பற்றி விளக்குதலும் ஒரு ஒப்பந்தம், உடன்படிக்கை, ஒப்பந்த இயலுமை,ஒப்பந்த உருவாக்கம், சம்மதத்தின் உண்மைத்துவம் என்பவற்றினை வரைவிலக்கணப்படுத்துதலும். |

**(a). <u>தபால் மூலம் ஏற்பு செய்வது தொடர்பான சட்டக் கொள்கைகள் :</u>**

ஏற்புக்கான கடிதமானது தபால் பெட்டியினுள் இடப்பட்ட நேரம் அங்கு வலிதான ஏற்பு ஒன்று இடம்பெற்றதாக கருதப்படும்.**(1 புள்ளி)** குறித்த ஏற்பு கடிதமானது கொடைமுனைவு செய்தவரை சென்றடைந்ததா இல்லையா என்பது இங்கு கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.**(1/2 புள்ளி)**

இந்த விதி ஏற்புடையதாவதற்கு பின்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

- தபால் மூலமாக ஏற்கப்படலாம் என ஒப்பந்த கட்சிக்காரர்கள் உடன்பட்டிருக்க வேண்டும்.

  **(1/2 புள்ளி )**
- தபாலானது இருகட்சிக்காரரும் பயன்படுத்தும் பொருத்தமான தொடர்பாடல் முறையாக இருக்க வேண்டும்.

  **(1/2 புள்ளி)**
- ஏற்பு கடிதமானது முறையாக முகவரியிடப்பட்டு, முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும்.

  **(1/2 புள்ளி)**

**[மொத்த புள்ளிகள் 3]**

**(b). <u>கொடைமுனைவை திரும்பப்பெறுதல் தொடர்பான சட்டக் கொள்கைகள்:</u>**

- கொடைமுனைவு செய்யப்பட்டவர் ஏற்பு செய்வதற்கு முன்னர், எந்த நேரத்திலும் கொடைமுனைவை திரும்பப் பெறலாம். **(1 புள்ளி ).**
- ஆனால் திரும்பப்பெறுதலானது கட்டாயமாக கொடைமுனைவு செய்யப்பட்டவருக்கு அறிவிக்கப்பட வேண்டும். **(1 புள்ளி),** அந்த அறிவித்தலானது கொடைமுனைவு செய்யப்பட்டவரை சென்றடைந்திருக்க வேண்டும். **(1 புள்ளி).**

**[மொத்த புள்ளிகள் 3]**

(c). **<u>வலிதான ஒப்பந்தம் உருவானதா இல்லையா:</u>**

மேற்சொன்ன சூழலில் சுனியினால் வலிதான கொடைமுனைவு ஒன்னு செய்யப்பட்டிருந்தது. **(1 புள்ளி)**

ஏற்பிற்கு கொடுக்கப்பட்ட சட்டக் கொள்கைகளுக்கு இணங்க ஜனவரி மாதம் 8 ஆம் திகதி 2016 ஆம் ஆண்டு ருனியினால் வலிதான ஏற்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது. **(1 புள்ளி)**

கொடைமுனைவை திரும்பப்பெறுவதான சுனியின் தீர்மானமானது ஜனவரி மாதம் 9 ஆம் திகதி 2016 ஆம் ஆண்டு தொலைப்பேசி வாயிலாக ருனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. **(1/2 புள்ளி)**

ஆனால், கொடைமுனைவானது ஏற்கனவே ஏற்பு செய்யப்பட்டு விட்டதனால் கொடைமுனைவை திரும்பபெறும் தீர்மானமானது வலிதற்றது. **(1/2 புள்ளி)**

ஆகவே, சுனி மற்றும் ருனி ஆகியோருக்கிடையில் வலிதான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. **(1 புள்ளி)**

**(மொத்த புள்ளிகள் 4)**

**(மொத்த வினாக்கள் மொத்தப் புள்ளிகள் 10)**

**வினா 04 (a)**

| கற்றல் வெளிப்பாடு : |
| --- |
| 3.2.1 பொருட்கள் விற்பனை ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படக் கூடிய உட்கிடையான நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்கள் பற்றி விளக்குதல். |

**(i) <u>கயானி சார்பான வாதங்கள்:</u>**

மேற்சொன்ன நிகழ்வின் அடிப்படையில் கயானி கொள்வனவு செய்த சிவப்பு பாஸ்மதி அரிசியானது அது வாங்கப்பட்ட நோக்கத்திற்கு உகந்ததல்ல**(1 புள்ளி)** , மற்றும் அது வியாபார தரம் வாய்ந்ததுமல்ல. **(1 புள்ளி)**

அதன் விளைவாக அமல் பொருள் விற்பனை ஒப்பந்தச் சட்டத்தின்படி உட்கிடையான உத்தரவாதத்தை மீறியுள்ளார்.**( 1 புள்ளி)**

**(மொத்த புள்ளிகள் 3)**

**(ii)** <u>அமல் சார்பான வாதங்கள் :</u>

அமல் 100 சிவப்பு பாஸ்மதி அரிசிப் பைகளை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் மாதிரியை பரிசோதித்திருந்தார். ஆகவே, அமலிற்கு குறையை கண்டுபிடிக்க கூடிய சந்தர்ப்பம் காணப்பட்டும், நியாயமான பரீட்சிப்பின் போது அதனை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. **(1 புள்ளி)**

பொருட்களை மாதிரியிற்கு இணங்க விற்றல் தொடர்பான உட்கிடையான நிபந்தனை இங்கு ஏற்புடையதாகும்.

- ஒருத் தொகை பொருட்களானது மாதிரியை ஒத்திருக்க வேண்டும். **( 1 புள்ளி)**; மற்றும்,
- பொருளில் காணப்பட்ட குறை(அரிசியுடன் பருப்பு கலந்திருந்தமை) மாதிரியை நியாயமான முறையில் பரீட்சித்த போது கண்டுபிடிக்கப்பட முடியாததாக இருந்தது. **(1 புள்ளி)**

**(மொத்த புள்ளிகள் 3)**

**(பகுதி (a) க்கான மொத்தம் = 6 புள்ளிகள்)**

**வினா 04. (b)**

| கற்றல் வெளிப்பாடு : |
|---|
| 3.4.1 'செலுத்தப்படாத விற்பனையாளரின்' உரிமைகள் உட்பட கொள்வனவாளர், விற்பனையாளர் ஒருவருக்கு கிடைக்கதக்க குறைத்தீர்வுகள் பற்றி விளக்குதல் |

பொருள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் <u>கயானி மற்றும் அமல் ஆகியோருக்கு பரிகாரங்கள் காணப்படுகிறது.</u>

பின்வருவனவற்றிற்காக அமலுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான உரிமையை கயானி பெற்றுக் கொள்ளுகிறார். **(1/2 புள்ளி)**

- இழப்பீட்டிற்காக **(1/2 புள்ளி )**
- பொருன் விற்பனை ஒப்பந்தத்திற்கான குறித்த நிறைவேற்றத்திற்காக. **(1/2 புள்ளி )**
- அரிசிப் பைக்காக செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்காக. **(1/2 புள்ளி)**

பின்வருவனவற்றிற்காக கமலுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான உரிமையை அமல் பெற்றுக் கொள்ளுகிறார். **(1/2 புள்ளி )**

- கயானி அமலிடம் கேட்டு பெறும் உரிமை பங்கின் காரணமாக தனக்கு ஏற்பட்ட செலவை திரும்பப் பெறுதலுக்காக.**(1/2 புள்ளி )**
- மாதிரியை ஒத்து பொருள் வாங்குவதுடன் தொடர்பான பொருள் விற்பனை ஒப்பந்தத்தின் உட்கிடையான வாசகங்களின் மீறல் காரணமாக இழப்பீட்டை கோரி. **(1/2 புள்ளி )**
- பொருள் விற்பனை ஒப்பந்தத்திற்கான குறித்த நிறைவேற்றத்தினை கோரி **(1/2 புள்ளி )**

**(பகுதி (b) க்கான மொத்தம் = 4 புள்ளிகள்)**

**(4 ஆவது வினாவுக்கான மொத்தம் = 10 புள்ளிகள்)**